[1984 மார்ச் 6

விரும்புகிறேன். நான் ஏற்கனவே கொடைரோட்டில் சுற்றுலா மையம் அமைக்க ஒரு கேள்வியைப் போட்டிருக்கிறேன். இதை இணைத்துப் போடுவார்களானால் நன்றாக இருக்கும். எனவே இரண்டையும் இணைப்பதற்கு வழிவகை செய்யப்படவேண்டு மென்று கேட்டிருக்கிறேன். அதற்கும் சேர்த்து வழிவகை செய் யப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர் களே, வீராகனூர் அணைப் பகுதி இப்போது முதல் கட்டமாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இரண்டாவது கட்ட மாகத் தான், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

துளசியாப்பட்டினத்திலுள்ள ஔவையார் கோவில்.

182 —(*வினா எண் 20341) —திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்தில் துளசியாப் பட்டினத்தில் ஔவையாருக்குக் கோயில் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், ஔவையாருக்கு விழா ஏதாவது எடுக் கப்படுகின்றதா?

(இ) அரசு சார்பில் ஔவையாருக்கு விழா எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் சதய நட்சத் திரத்தில் ஔவையாருக்கு விழா எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) ஔவையாருக்கு விழா எடுக்க ஒரு குழு நியமிக்கப்பட்டு விழா நடத்தப்பட்டு வருகிறது. விழாவினை சிறப்பாக நடத்து மாறு தஞ்சை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் கோரப்பட்டுள்ளார்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ஔவையார் கோவிலுடைய வருமானம் குறை வாக இருப்பதனாலே, அந்தக் குழுவினர் நன்கொடை வசூல் செய்து தான் விழாவினை நடத்த வேண்டிய நிலையில் விழா வினை சிறப்பாக நடத்தமுடியாமல் இருக்கிறது. வசதியுள்ள வெளியிலுள்ள கோவில்களிலிருந்து நிதியளித்தோ, அல்லது அர சாங்கமே அந்த விழாவினை நடத்தவோ முன்வருமா?

1984 மார்ச் 6]

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற விழா எல்லாம் பொதுமக்களின் ஆதரவோடும், பொது மக்களின் முழுமையான உணர்வோடும் தான் நடத்தப்படவேண்டுமே தவிர, எதற்கெடுத்தாலும், பெரிய ஆலயங்களின் உதவி அளிக்கவேண்டுமென்று சொல்வதும், அரசாங்கமே நடத்தவேண்டுமென்று சொல்வதும் சரியல்ல. இருந்தாலும தமிழகத்திலே ஒரே ஒரு இடத்தில்தான் இந்த ஔவையார் ஆலயம் அமைக்கப்பட்டு, அங்கே அந்த விழா நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, முயற்சி எடுத்து, இந்த விழாவில் பணியாற்றலாம். தேவையான உதவிகளை அறநிலையத்துறை மூலம் அரசு அவர்களுக்கு வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

திரு. எம்.எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, இந்த விழாவை ஆரம்பக் காலத்தில் நல்லமுறையிலே சிறப்பாக நடத்திக் கொண்டுவந்தார்கள். ஆனால் ஊரிலே சில பிரச்சினைகள் வந்தபோது விழா நடத்துவதில் சில சங்கடங்கள் வந்தன. எனவே அரசாங்கமே அதை நடத்தினால் சிறப்பாக இருக்கும். ஆகவே அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் விழாவாக அதை நடத்த முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு சிக்கல் இருப்பதாக இதுவரை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படி ஒரு வேளை பொதுமக்கள் ஒத்துழைப்போடு. இந்த விழாவை நடத்துவதில் சிக்கல் இருந்தால், அந்த விழாவை அறநிலையத்துறையின் மூலம் அரசே ஏற்று நடத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழகத்தில் 'Free Trade Zone' ஏற்படுத்தும் திட்டம்.

183—(*வினா எண். 17099) திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 'Free Trade Zon.' ஏற்படுத்த மைய அரசை மாநில அரசு கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் சென்னையில் தடையற்ற வாணிப மண்டலம் அமைப்பதற்கான தமிழ்நாடு அரசின் கருத்திற்கு மைய அரசு